பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
29 05 2025 **THURSDAY** 6 45 **AM**

வணக்கம்-மாநில செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. உள்கட்டமைப்பு திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவேற்றுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

2. காப்பீட்டு நிறுவனங்கள் தங்கள் சேவைத் திறனை மேம்படுத்த மின்னணு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான அவசியம் குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

3. மாநிலத்தில் சேதமடைந்த சாலைகளை புகைப்படம் எடுத்து, நெடுஞ்சாலைத்துறையின் 'நம்ம சாலை' செயலியில் பதிவிட்டால் உடனடியாக சீர் செய்யப்படும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

4. நீலகிரி, கோவை மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் இன்று கன முதல் அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் முதலாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் பஞ்சாப் அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

>>>>>>><<<<<<<

உள்கட்டமைப்பு திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவேற்றுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் மத்திய மாநில அரசுகள் தொடர்புடைய 62 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான சாலைப் போக்குவரத்து, மின்சாரம் மற்றும் நீர்வளம் தொடர்புடைய உள்கட்டமைப்பு திட்டங்களின செயலாக்கம் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

அப்போது பேசிய அவர், திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் தாமதம், செலவுகளை அதிகரிப்பதோடு, மக்களுக்கான சேவைகளும் தாமதமாகக்கூடும் என்று அவர் கூறினார்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்புடனும், திறனுடனும் செயல்பட்டு பணிகளை உரிய நேரத்தில் நிறைவு செய்யுமாறு பிரதமர் கேட்டுக் கொண்டார்.

பிரதமர் பங்கேற்ற இதுதொடர்பான கூட்டங்கள் மூலம் இதுவரை 20 லட்சத்து 64 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 373 திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

காப்பீட்டு நிறுவனங்கள் தங்கள் சேவைத் திறனை மேம்படுத்த மின்னணு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான அவசியம் குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களின் பணிகள் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் காப்பீட்டு பிரீமியம் தொகை வசூல், உரிமை கோரல் உள்ளிட்ட விவரங்களை அவர் கேட்டறிந்தார்.

இணையதள மோசடி உள்ளிட்ட புதிய அபாயங்களை தவிர்க்கும் வகையிலும், நுகர்வோருக்கு உகந்த வகையிலும் புதிய காப்பீட்டு திட்டங்களை ஏற்படுத்துமாறு அதிகாரிகளை திருமதி. நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டார்.

கடந்த நிதியாண்டில் காப்பீட்டு நிறுவனங்கள் 3 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான பிரீமியம் தொகையை வசூல் செய்துள்ளதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

>>>>>>><<<<<<<

மாநிலத்தில் சேதமடைந்த சாலைகளை புகைப்படம் எடுத்து, நெடுஞ்சாலைத்துறையின் ‘நம்ம சாலை’ செயலியில் பதிவிட்டால் உடனடியாக சீர் செய்யப்படும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் சாலை பாதுகாப்பு குறித்த மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசினார்.

சாலை விபத்துகளை தடுக்க ஓட்டுநர் உரிமம் வழங்கும் போது, உரிமம் பெறுவோருக்கு வாகன இயக்கம் குறித்த விழிப்புணர்வு அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு குறித்த கையேடுகளை வழங்க வேண்டும் என்று அவர் கூறினார்.

நிகழ்ச்சியில், சிறப்பாக பணியாற்றிய போக்குவரத்து காவல்துறையினருக்கு திரு. எ.வ. வேலு பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

>>>>>>><<<<<<<

மத்திய அரசின் தேசிய இயந்திரமயமாக்கப்பட்ட தூய்மை சூழலுக்கான நடவடிக்கை திட்டத்தின் கீழ், தூய்மைப் பணிகளில் ஈடுபடுவோரின் சுயவிவரங்கள் பதிவு செய்யும் பணி நாமக்கல் மாநகராட்சியில் தொடங்கியுள்ளது.

இதன் மூலம், இப்பணிகளில் ஈடுபடுவோருக்கு பல்வேறு பயன்கள் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கண்ணன் 40 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

திருத்தணி அருகே சென்னை – திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பொன்பாடி சோதனைச் சாவடியில் ஆட்சியர் திரு. பிரதாப், காவல்துறை கண்காணிப்பாளர் திரு. சீனிவாச பெருமாள் ஆகியோர் நேற்றிரவு ஆய்வு மேற்கொண்டனர்.

சோதனைச் சாவடியில் வாகனங்களை முறையாக சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று ஆட்சியர், அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

சோதனைச் சாவடியை சுற்றி கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட வேண்டும் என்றும் ஆட்சியர் வலியுறுத்தினார்.

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் நீலகிரி, கோவை மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் இன்று கன முதல் அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களில் கன முதல் மிககனமழை பெய்யக்கூடும் என்றும் அது கூறியுள்ளது.

தரைக்காற்று அவ்வப்போது 40 முதல் 50 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கக்கடலின் பெரும்பாலான பகுதிகள், அரபிக்கடலின் தெற்கு மற்றும் மத்தியக் கிழக்கு பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் ஐந்து நாட்களுக்கு அப்பகுதிக்கு செல்ல வேண்டாம் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால், அனைத்து சுற்றுலா தலங்களும் மீண்டும் மூடப்பட்டுள்ளன.

அத்தியாவசிய தேவையின்றி பொதுமக்கள் வெளியே வர வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – சரவணன் 49 செகண்ட்ஸ்)

இந்நிலையில், தென்மேற்கு பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் திரு. தினேஷ் குமார் நேற்று மாலை ஆய்வு செய்தார்.

மாவட்டத்தில் உள்ள 200க்கும் மேற்பட்ட நீர்நிலைகள் நிரம்பிய நிலையில், சிறுவர்கள் அங்கு செல்வதை தடுக்க வேண்டும் என்றும், கரைகளை பலப்படுத்தி தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் வருவாய்த் துறையினரை அவர் கேட்டுக் கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

இருவரிச் செய்திகள்

நடப்பாண்டில் இலங்கைக்குச் சென்ற வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 10 லட்சத்தை கடந்துள்ளதாக அந்நாட்டு சுற்றுலா வளர்ச்சி ஆணையம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

அமெரிக்க குடிமக்களின் பேச்சு சுதந்திரத்திற்கு எதிராக செயல்பட்டு நடவடிக்கை மேற்கொண்ட வெளிநாட்டு அதிகாரிகளுக்கு புதிய விசா கட்டுப்பாடுகளை அமெரிக்கா விதித்துள்ளது.

>>>>>>><<<<<<<

குடியரசுத்தலைவர் மாளிகையில் உள்ள கலாச்சார மையத்தில் இரண்டு நாள் இலக்கிய மாநாட்டை, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று தொடங்கி வைக்கிறார்.

>>>>>>><<<<<<<

சிக்கிம் மாநிலம் உருவாக்கப்பட்டு, 50 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி, அம்மாநிலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் திரு.நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

>>>>>>><<<<<<<

புதுதில்லியில் நடைபெற்ற ஆப்பிரிக்க தின கொண்டாட்டங்களில் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கலந்து கொண்டார்.

>>>>>>><<<<<<<

மத்திய குடிமைப் பணியாளர் தேர்வாணையம் **upsconline.nic.in** என்ற புதிய இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

>>>>>>><<<<<<<

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ், அரசின் திட்டங்கள், சேவைகள், செயல்பாடுகள குறித்து ஆட்சியர் திருமதி. உமா ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>>><<<<<<<

திருவண்ணாமலை மாவட்டத்தில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த 61 பேருக்கு சுமார் 15 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாநில சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் திரு. அருண் வழங்கினார்.

>>>>>>><<<<<<<

நாகை மாவட்டம், ராமர் மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பால ஆஞ்சநேயர் ஆலயத்தில் வைகாசி திருவிழாவை ஒட்டி, ஏராளமான பக்தர்கள் ஊர்வலமாக சென்று பாலபிஷேகம் செய்தனர்.

>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ப்ளேஆப் சுற்று ஆட்டங்கள் இன்று தொடங்குகின்றன.

இன்று நடைபெறவுள்ள முதலாவது தகுதிச் சுற்றுப் போட்டியில் பஞ்சாப் அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

முல்லன்பூரில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>><<<<<<<

பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, யுகி பாம்ரி மற்றும் ரோஹன் போபன்னா இணைகள் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் ஸ்ரீராம் பாலாஜி – மெக்ஸிகோவின் **Angel Reyes** இணை, 6-2, 6-1 என்ற செட்கணக்கில் சீனாவின் **Yunchaokete Bu -** அர்ஜென்டினாவின் **Camilo Ugo** இணையை வென்றது.

மற்றொரு போட்டியில் யுகி பாம்ரி – அமெரிக்காவின் **Robert Galloway** இணை, 6-3, 6-7, 6-3 என்ற செட்கணக்கில் நெதர்லாந்தின் **Robin Haase -** ஜெர்மனியின் **Hendrik Jebens** இணையை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் ரோஹன் போபன்னா – செக் குடியரசின் **Adam Pavlasek** இணை, 7-6, 5-7, 6-1 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் **Robert Cash – James Trancy** இணையை வென்றது.

**>>>>>>>END<<<<<<<**